1978 மார்ச் 27]

மன்னார்குடியிலுள்ள நடுநிலைப் பள்ளி.

*673 வினா—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி நகரில் உள்ள ஜெயலக்ஷ்மி விலாஸ் நடுத்தரப் பள்ளியை மூடி விடுவதாக அதன் நிர்வாகி அறிவித்துள்ளாரா ?

(ஆ) அந்தப் பள்ளியை எடுத்து நடத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) ஆம்.

(ஆ) மன்னார்குடி நகரமன்றம் இப்பள்ளியை எடுத்து நடத்துவதற்கு அறிவுரை வழங்குவது பரிசீலனையில் இருக்கிறது.

பாளையங்கோட்டையில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி.

*674 வினா—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம், பாளையங்கோட்டையில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9.10)

திரு. துரை கலியமூர்த்தி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று பாளையங்கோட்டையிலே, சுற்றுப்புற வட்டாரத்திலே பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று அமைத்தால் நல்லதாக இருக்கும் என்ற எண்ணம் இருக்கிறது. அதை அரசுக்கும் மனுவாக அனுப்பி இருக்கிறார்கள். அதே நிலையிலே இன்று யூனியன் தலைமையிடமாக அமைப்பதற்குக் குறிப்பு இருக்கிறது. அதற்காக உடனடியாக இதைச் செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.